1st July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எப்போது சர்க்கார் நிர்ணயிக்கக்கூடும் என்று சொல்வதற்கு இல்லை. தான்யக்கொள்முதல் செய்கிறவர்களில் ஸ்டாக் வைத்துக்கொள்ளுகிறவர்களுக்குத்தான் விலை நிர்ணயம் பற்றி அச்சம் ஏற்படக்கூடும். அவர்களைப் பற்றி அரசாங்கத்திற்குக் கவலையில்லை.

SRI S. B. ADITYAN : நியாய விலைக் கடைகளை எல்லா ஜில்லாக்களிலும் திறப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துவருகிறார்களா? 9-20 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூடியவரையில் நியாய விலைக்கடைகள் எல்லா ஜில்லாக்களிலும் திறக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுதான் வருகிறது.

SRI A. GOVINDASWAMI : இப்போது திறக்கப்பட்டிருக்கும் நியாய விலைக்கடைகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால், ஏந்த எந்த இடங்களில் விவசாயிகளாக இல்லாமல் கைத்தறி நெசவாளர்களாகவும், தொழிலாளர்களாகவும் உள்ள மக்கள் அதிகமாக இருக்கின்றனரோ அந்த இடங்களிலெல்லாம் அவசியம் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எங்கே விவசாயிகளாக இல்லாத தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றனரோ அங்கே அதிகமாக நியாய விலைக் கடைகளைத் திறப்பதில்தான் அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது.

SRI M. JAGANNATHAN : தஞ்சாவூர் ஜில்லாவில் மாத்திரம் அரிசிக்கும் நெல்லுக்கும் திடீரென்று அதிகமான "டிமாண்ட்" ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்று அரசாங்கம் சொல்லுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காரணம், தஞ்சாவூ ஜில்லாவில் அவை அதிகமாக உற்பத்தியாகின்றன. அதிகமாக உற்பத்தியாகிற அந்த இடத்துக்கு கேரள ராஜ்யத்திலிருந்தும் மற்ற ராஜ்யங்களிலிருந்தும் "டிமாண்ட்" அதிகமாகி வருகிறது

SRI V. K. KOTHANDARAMAN : மக்கள் உணவு உட்கொள்ளவது. அதிகமாகிவிட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அப்படி என்றால், மக்களுடைய வயிறுகள் பெரிதாகப் போயிவிட்டனவா அல்லது அவர்கள் உணவு உட்கொள்ளும் முறையில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள நாங்கள் ஆசைப்படுகிறோம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உணவுப் பற்றாக் குறையைச் சமாளிப்பதற்கு கண்ட்ரோல் முறை இருந்தபோது மக்களுக்கு ஆறு அவுன்ஸ் அல்லது ஏழு அவுன்ஸ் அரிசி கொடுக்கப்பட்டது. அதன் காரணமாக அப்போது ஆறு அவுன்ஸ் ஏழு அவுன்ஸ் என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டதும் கனம் அங்கத்தினருக்கு ஞாபகம் இருக்கும். இப்போது என்மதிப்புப் படி 12 அவுன்ஸ் உட்கொள்ளப்படுகிறது. 16 அவுன்ஸ் உட்கொள்ள வேண்டும் என்று தான் திட்டம் வகுத்து நிறைவேற்ற பார்க்கிறோம். மேலும், ஜனத்தொகையும் அதிகமாகப் பெருகி வருகிறது.

Representation of Pensioners' Association

* 39 *Q.*—SRI K. R. VISWANATHAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representation, dated 6th May 1957, from the State Pensioners' Association about the inadequacy of the recent enhancement in the pension; and

(*b*) if so, the action taken thereon?